தினமணி

கத்தரிக்காயில் "கனத்த லாபம்' பார்க்கும் விவசாயிகள்

First Published : 08 Jul 2010 02:56:15 AM IST



திருத்தணி கே.ஜி. கண்டிகை பகுதியில் அமோகமாக விளைச்சல் கண்டுள்ள கத்தரிக்காய்களைப் பறிக்கும் விவசாயப் பெண்கள்.

திருத்தணி, ஜூலை 7: திருத்தணி அருகே கே.ஜி. கண்டிகை பகுதியில் கத்தரிக்காய் விளைச்சல் அமோகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டதால், கடந்த ஆறு மாதங்களாக நெல் விவசாயத்தில் பெருமளவு லாபத்தைப் பார்க்க முடியவில்லை. இதனால், மிகவும் கவலையில் இருந்த விவசாயிகளுக்கு நம்பிக்கை தரும் விதமாய் அமைந்திருக்கிறது தற்போதைய கத்தரிக்காய் விளைச்சல்.

பங்குனியில் நடவு செய்து சித்திரையில் அறுவடை செய்யக்கூடிய குறுகிய காலப்பயிர் கத்தரிக்காய். வெயில் காலத்திலும் செழித்து வளரக்கூடிய இப்பயிரை கே.ஜி.கண்டிகை, செருக்கனூர், ராமகிருஷ்ணாபுரம், நொச்சலி, செஞ்சிகண்டிகை, என்.எம்.ஆர். கண்டிகை, உள்ளிட்ட பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்துள்ளனர்.

கத்தரிக்காய் விதை ஏக்கருக்கு இரண்டு கிலோ தேவை. இரண்டு கிலோ விதை விலை ரூ. 2,600. உழவு செய்ய டிராக்டர் கூலி, தண்ணீர் பாய்ச்சும் செலவு என ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஒரு ஏக்கருக்கு மூன்று டன் கத்தரிக்காய் விளைச்சல் கிடைக்கிறது. இதன் மூலம் சரியான லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.இங்கு விளைச்சலாகும் கத்தரிக்காய் சென்னை, வேலூர், திருவள்ளூர், திருத்தணி மற்றும் ஆந்திர மாநிலம் நகரி, புத்தூர் ஆகிய


பகுதிகளிலும் மொத்த விற்பனைக்குச் செல்கிறது. இதுகுறித்து விவசாயி கோவிந்தன் கூறியதாவது: கோடை காலத்தில் எல்லா பயிர்களும் குறைந்தளவே விளைச்சல் தரும். ஆனால், கத்தரிக்காய் மட்டும் நன்கு செழித்து வளரும். இதனால்தான், வெயில் காலத்தில் கத்தரிக்காயை பயிரிட்டு லாபம் பார்க்கிறோம் என்றார்.

ஏக்கருக்கு மூன்று டன் விளைச்சல் கிடைக்கிறது. கிலோவுக்கு 15 முதல் 18 ரூபாய் வரை மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். ஆனால் சந்தையில் 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பாடுபட்டு பயிர் செய்து விளைச்சல் தரும் எங்களுக்கு முழுப்பலன் கிடைக்கவில்லை. எனவே அரசாங்கம் உழவர் சந்தைகளில் நியாயமான விலையில் கொள்முதல் செய்தால் எங்களுக்கு மேலும் வருமானம் கிடைக்கும் என்றும் கோவிந்தன் கூறுகிறார்.

""இடைதரகர்களுக்கு லாபம் செல்வதால் எங்களை போன்ற விவசாயிகள் பாதிப்படைகிறோம். இருப்பினும் மற்ற பயிர்களை பயிர்செய்து பெருத்த நஷ்டம் அடைவதைவிட கத்தரிக்காய் பயிர் செய்வதன் மூலம் ஓரளவுக்காவது லாபம் கிடைப்பது ஆறுதலாக உள்ளது" என்கின்றனர் விவசாயிகள்.

**விவசாயிகளின் நண்பன் "அசோலா'**

First Published : 08 Jul 2010 12:39:11 AM IST



திருவள்ளூர், ஜூலை 7: ரசாயன உரங்களால் பாதிக்கப்பட்டுள்ள மண் வளம் மற்றும் மகசூல் குறைபாடுகளைத் தவிர்க்க விவசாயிகள் அசோலா உயிர் உரத்தை பயன்படுத்தி அமோக விளைச்சல் பெறலாம் என திரூர் நெல் ஆராய்ச்சி மையத் தலைவர் கோ.வி.இராமசுப்பிரமணியன் தெரிவித்தார்.

பொதுவாக நவீன யுகத்தில் விவசாயத்துக்கும் பசுமை புரட்சி என்ற பெயரில் அதிகளவில் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அதிக பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்துவதால் பயிர்களுக்கு தீமை விளைக்கும் பூச்சிகள் அழிவதுடன் விவசாயத்துக்கு துணைபுரியும் நுண்ணுயிர்களும் அழிந்துவிடுவது வருந்தத்தக்கது. ரசாயன உரங்களால் மண் வளம் மாசுபடுவதோடு சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுகிறது. ரசாயன உரத்தால் விளைவிக்கப்படும் பொருள்களை உட்கொள்ளும் மனிதனுக்கும் மறைமுக தீங்குகள், பக்க விளைவுகள் ஏற்படலாம். எனவே விவசாயிகள் இயற்கை உரங்களாகிய தொழு உரம் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்துவது மிகவும் அவசியம். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, நீலப்பச்சை பாசி,

அசோலா ஆகிய உயிர் உரங்களை விவசாயிகள் பயன்படுத்தினால் மண் வளம் செழிப்பாக இருப்பதுடன் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படாது. அசோலா என்பது உயிர் உரங்களில் முக்கியமானதும், விவசாயிகளின் நண்பன் என்று அழைக்கப்படுவதுமாகும்.
அசோலாவின் தன்மைகள்: தழைச்சத்தை நிலை நிறுத்துகிறது. பசுந்தாள் உரமாக பயன்படுகிறது. பயிர் உற்பத்தியை அதிகரிக்கிறது. நாற்றங்கால் விடப்பட்ட 2-3 நாள்களில் இரு மடங்காக பெருகும். உற்பத்தி பெருக்கமும் சுலபம். அசோலா அதிக புரதச்சத்து நிறைந்தது. ஆகையால் மீன், கோழி போன்றவற்றுக்கு தீவனமாகவும் பயன்படுத்தலாம். நீர் நிலைகளில் படர்ந்து வளரும் தன்மை உடையதால் களைகள் மற்றும் கொசுக்களையும் கட்டுப்படுத்துகிறது. எனவே விவசாயிகள் தங்களது மண் வளத்தைப் பாதுகாக்க அசோலா உயிர் உரத்தை பயன்படுத்தலாம் என்றார் கோ.வி.ராமசுப்பிரமணியன்.

**ஜூலை 9-ல் மண்புழு உரம் தயாரிப்பு குறித்த இலவசப் பயிற்சி**

First Published : 07 Jul 2010 12:08:39 PM IST

நீடாமங்கலம் ஜூலை 6: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் திருவாரூர் மாவட்ட விவசாயிகள் பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் பயன் பெறும் வகையில் மண்புழு உரம் தயாரிப்பது பற்றிய இலவசப் பயிற்சி வரும் 9}ம் தேதி நடைபெறவுள்ளது.

பயிற்சி பெற விரும்புவர்கள் தங்கள் பெயரை அலுவலகத்தில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பெயர் பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் 04367 - 260666,04367-261444.

இந்தத் தகவலை வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.

**மரபணு மாற்றுப் பயிர்களுக்கு ஆதரவு தர வேண்டும்**

First Published : 08 Jul 2010 09:07:24 AM IST

கோவை, ஜூலை 7: மரபணு மாற்றுப் பயிர்களுக்கு ஆதரவு தர வேண்டும் என்று, கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை.யில் தேசிய பயிர் பெருக்கவியல் கருத்தரங்கு துவக்க விழாவில் தேசிய வேளாண் விஞ்ஞானிகள் தேர்வாணையத் தலைவர் சி.டி.மாயி தெரிவித்தார்.
÷இந்தியப் பயிர் இனப்பெருக்க வல்லுநர் சங்கம் சார்பில் நடைபெற்றுவரும் தேசிய பயிர் பெருக்கவியல் கருத்தரங்க துவக்க விழாவில் புதுதில்லியில் உள்ள தேசிய வேளாண் விஞ்ஞானிகள் தேர்வாணையத் தலைவர் சி.டி.மாயி பேசியது:
÷மரபணு மாற்றுப் பயிர்கள் குறித்த அறிவு மேம்பட வேண்டும். மரபணுக்களை வெளியே எடுத்து வகைப்படுத்துதல், ஒருவகை பயிரில் இருந்து வேறு பயிருக்கு உட்புகுத்துதல் ஆகிய

தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. மரபணுக்கள் மாற்றத்தில் இடர்பாடுகள் களையப்பட்டுள்ளன.
÷இத்துறையில் வளர்ச்சி இருந்தாலும் கூட, பயிர் இனப்பெருக்கவியல் மற்றும் மரபு தெழில்நுட்பவியல் ஆகிய இரண்டுக்கும் இடைவெளி காணப்படுகிறது. இந்த இடைவெளியை நீக்க பல்வேறு புதிய தொழில்நுட்பகளை பயன்படுத்தி பயிர் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க வேண்டும்.
÷மரபு தொழில்நுட்பவியல், மரபணு மாற்றுவியல், உயிரி தொழில்நுட்பவியல், உயிர்த் தகவலியல் ஆகியவை ஆய்வுக்கூடங்களில் பயன்பாட்டில் இருக்கின்றன. இத் தொழில்நுட்பங்களை பயிர் உற்பத்தியில் நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும்.

தற்சமயம் அநேக பயிர் ரகங்களில் பயிர் உற்பத்தி தேக்க நிலையில் காணப்படுகிறது. அதனால், மரபு தொழில்நுட்பத்தையும், உயர் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தவேண்டும். பொதுத்துறை மற்றும் தனியார் துறையினர் இத்தகு ஆராய்ச்சி, வளர்ச்சியில் இணைந்து செயல்படவேண்டும்.
அனைத்து பயிர்களிலும் உள்ள மரபுக் கருவூலங்களை வகைப்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி நிலையங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். பாரம்பரிய பயிர் ரகங்களில் இருந்து தேவையான சிறந்த மரபணுக்களை உயர் விளைச்சல் ரகம் உள்ள பயிர்களுக்கு மாற்ற முயற்சி செய்யவேண்டும்.

÷பி.டி.தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்துவருகிறது. பி.டி.பருத்தியை உழவர்கள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இந்தியாவில் 85 விழுக்காடு பருத்தி சாகுபடி பரப்பளவு பி.டி.பருத்தியாக மாறியுள்ளது. விவசாயிகள் இத் தொழில்நுட்பத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.
அமெரிக்காவில் மரபணு மக்காச்சோளம், சோயா ஆகியவற்றில் பூச்சித் தாக்குதல் ஏற்படுத்துவதில்லை. அவற்றை உட்கொள்வதால் பாதிப்பும் வருவதில்லை. எனவே அதற்கு ஆதரவு கிடைத்துள்ளது. மரபணு மாற்றுப் பயிர்களுக்கு ஆதரவு தரவேண்டும்.
÷பயிர் இனப்பெருக்க ஆராய்ச்சியில், பி.டி.தொழில்நுட்பத்தோடு நின்றுவிடாமல், பல்வேறு சிறந்த மரபணு மாற்றுப் பயிர்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும். மரபணு தொழில்நுட்பம் மூலம் வறட்சியை தாங்கும் பயிர் ரகங்கள், களர்- உவர் நிலங்களுக்கு ஏற்ற பயிர் ரகங்கள், அதிக ஊட்டச் சத்து அளிக்கும் பயிர் ரகங்கள், இடுபொருள் குறைவாகத் தேவைப்படும் பயிர் ரகங்களை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அதன் மூலம், நம்நாட்டில் பசுமைப் புரட்சி என்னென்றும் பசுமைப் புரட்சியாக இருக்கும், என்றார்.
இக்கருத்தரங்கிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை.துணை வேந்தர் பி.முருகேசபூபதி தலைமை வகித்தார்.

÷இந்தியப் பயிர் இனப்பெருக்க வல்லுநர் சங்கத் தலைவர் கே.தியாகராஜன், அதன் நிறுவனத் தலைவர் எம்.ரங்கசாமி, ஆத்தூர் ராசி சீட்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் எம்.ராமசாமி, பருத்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆலோசகர் வி.சந்தானம், தமிழ்நாடு வேளாண் பல்கலை. ஆராய்ச்சி இயக்குநர் எம்.பரமாத்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
÷இக்கருத்தரங்கு 9-ம் தேதி (நாளை) வரை நடைபெற உள்ளது. நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் பயிர் இனப்பெருக்க மற்றும் உயிர் தொழில்நுட்ப விஞ்ஞானிகள் 250 பேர் தங்கள் ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க உள்ளனர்.

**அரசு தோட்டக்கலைப் பண்ணை நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

First Published : 07 Jul 2010 12:05:55 PM IST

புதுக்கோட்டை, ஜூலை 6: புதுக்கோட்டை மாவட்டம், நாட்டுமங்கலம் அரசுத் தோட்டக்கலைப் பண்ணையின் நிர்வாகச் சீர்கேடுகளையும் தொழிலாளர் விரோதப் போக்கையும் கண்டித்து தொழிலாளர் சங்கத்தினர் (ஏஐடியுசி) செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

""பிரதிமாதம் 10 தேதிக்குள் ஊதியம் அளிக்க வேண்டும், பண்ணைத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வழங்க வேண்டும். தினக்கூலிப் பணியாளர்களை பாரபட்சமாகவும் பெண் தொழிலாளர்களைத் தரக்குறைவாகவும் நடத்துவதைக் கைவிட வேண்டும். சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்ளும் பண்ணை மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, மாவட்ட ஏஐடியுசி துணைத் தலைவர் உ. அரசப்பன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் வீ. சிங்கமுத்து ஆர்ப்பாட்டத்தைத் தொடக்கிவைத்தார். கட்டுமானத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் கே. ஆர். தர்மராஜன், நிர்வாகிகள் எம்.என். ராமச்சந்திரன், ஆர். செல்வராஜ், ஆர். முருகானந்தம் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை துப்புரவு தொழிலாளர் சங்க மாவட்ட நிர்வாகி க.சி. விடுதலைக்குமரன் ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்தார்.

தினமலர்

**கம்மாபுரம் விவசாயிகளுக்கு ஆடிப் பட்ட காய்கறி விதைகள்**

விருத்தாசலம் : கம்மாபுரம் பகுதி விவசாயிகள் ஆடிப் பட்டத் திற்கு தேவையான காய் கறி விதைகளை தோட் டக்கலை இயக்குநர் அலுவலகத்தில் வாங்கி பயனடையலாம்.

இதுகுறித்து கம்மாபுரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் வேல்விழி விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கம்மாபுரம் வட்டார விவசாயிகளுக்கு ஆடிப் பட்டத்திற்கு தேவையான காய்கறி விதைகளான கத்தரி பீர்க்கன், கீரை விதை, வீட்டு காய்கறி தோட்ட விதை பொட்டலங்கள் கம்மாபுரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருப்பு வைக் கப்பட்டுள்ளது. விவசாயிகள் விதைகளை வாங்கி பயனடையலாம். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட் டுள்ளது.

**ரசாயன, பூச்சிக்கொல்லி மருந்து பரிந்துரை? கொலை குற்றத்துக்கு நிகரானவர்கள் இயற்கை வேளாண் விஞ்ஞானி சாபம**

புதுக்கோட்டை: ""பயிர் பாதுகாப்புக்கு ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு பரிந்துரை செய்பவர்கள் கொலை குற்றத்துக்கு நிகரானவர்கள்," என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

புதுக்கோட்டை அடுத்த வாகைப்பட்டி கிராமத்தில் பாரம்பரிய விவசாய மீட்பு மாநாடு நடந்தது. இதை துவக்கிவைத்து நம்மாழ்வார் பேசியதாவது: விவசாயப் பணிகளிலும், பயிர் சாகுபடியிலும் இயற்கைக்கு நேர்மாறான யுக்திகளை நாம் பின்பற்றி வருவதால் விவசாய விளை நிலங்கள் அனைத்தும் மலட்டு தன்மையடைந்து வருகிறது. இவற்றில் சாகுபடி செய்வதன் மூலம் கிடைக்கும் உணவு பொருட்களை உட்கொள்வதன் மூலம் நாம் மட்டுமின்றி நமது எதிர்கால சந்ததியினரும் நோய் நொடியுடன் வாழவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். பயிர் சாகுபடியில் நவீனம் புகுத்தப்பட்டு வருவதால் நமது முன்னோர்கள் பயன்படுத்திவந்த பல வகையான விதைகள் மாயமாக மறைந்துவிட்டது. அவற்றை தேடி கண்டுபிடித்து மீட்கவும், நம்முன்னோர்கள் பின்பற்றிவந்த பாராம்பரிய முறையிலான விவசாயம் மற்றும் பயிர் சாகுபடி முறைகளை மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் கிராமங்கள் தோறும்

இதுபோன்ற பாரம்பரிய விவசாய மீட்பு மாநாடு நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு இயற்கையை விரும்பும் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. கிராமப்பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் தற்போது இயற்கை விவசாயத்தை பின்பற்றத் துவங்கியுள்ளனர். இவை நோய் நொடியற்ற புதிய சமுதாயத்தை உருவாக்க வழிவகுக்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

பயிர் சாகுபடிக்கு விதவிதமான ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு பரிந்துரை செய்பவர்களும் ஒருவிதத்தில் கொலை குற்றத்துக்கு நிகரானவர்கள் தான் என்பதால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இயற்கையை நாம் அழிக்க முற்பட்டால் அவை நம்மை அழித்துவிடும் விவசாயிகள் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். இயற்கையுடன் இணைந்த விவசாயப் பணிகள் மற்றும் பயிர் சாகுபடி முறைகளை நாம் அனைவரும் பின்பற்றவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மாநாட்டில் ஆலப்பன், அகிலா, ஆனந்த், மாறன், ராஜகுணசேகரன், பாலாண்டார், மலையப்பன், ராஜேந்திரன் உட்பட இயற்கை விவசாயிகள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

**சாக்கடை கழிவு நீரில் விளையும் கீரைகள் மார்க்கெட்டில் விற்பனை**

தர்மபுரி: தர்மபுரி மார்க்கெட்டுக்கு வரும் கீரைகள் புறம்போக்கு நிலங்களில் சாக்கடை கழிவு நீர்களில் வளரும் கீரைகள் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரும் அவலம் நடந்து வருகிறது.

சந்தைக்கு வரும் பொருட்களில் கலப்படம் இல்லாத பொருட்களை பார்க்க முடியாத நிலையுள்ளது. விவசாயத்தில் ஏற்படும் நஷ்டத்தால், பல விவசாயிகள் விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றி வருகின்றனர். உணவு தேவைக்கு ஏற்ற உற்பத்தி இல்லாமையால் பொருட்களில் விலை ஏற்றம். உணவு தட்டுப்பாடு உள்ளிட்டவைகளை சந்திக்கும் அவல நிலையுள்ளது. தர்மபுரியில் புறம்போக்கு நிலங்களில் சாக்கடை கழிவு நீரில் வளரும் கீரை வகைகள் அதிக அளவில் சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது.

தர்மபுரியை அடுத்த ஒட்டப்பட்டி பகுதியில் தொழிற்சாலை கழிவுகள் சாக்கடை நீர் பெருக்கெடுத்து ஓடும் பகுதியில் பொன்னாங்கண்ணி கீரைகள் அதிக அளவில் முளைத்துள்ளது.

அந்த பகுதியை சேர்ந்த ஏழை விவசாய கூலி தொழிலாளர்கள் சாக்டை கழிவு நீரில் வளர்ந்து இருக்கும் கீரையை அறுவடை செய்து சந்தையில் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இது போன்ற கீரை வகைகள் பார்க்க பசுமையாக இருப்பதால், குறைந்த விலையில் கிடைப்பதாலும், பொதுமக்கள் வாங்கி சென்று சமைத்து சாப்பிடுகின்றனர். சாக்கடை கழிவுகளில் உள்ள கிருமிகள் மூலம் பல்வேறு நோய் தொற்று அபாயம் உள்ளதை அறியாமல் சந்தைக்கு வரும் கீரைகளை பொதுமக்கள் வாங்கி சாப்பிடுகின்றனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது: பல இடங்களில் கழிவு நீர் தேக்க பகுதியில் தான் கீரைகள் சாகுபடி நடந்து வருகிறது. சந்தையில் இருந்து எந்த கீரையை வாங்கி சென்றாலும், கீரையை தண்ணீரில் உப்பு மற்றும் மஞ்சள் தூள் போட்டு ஊற வைத்து, கழுவிய பின் பயன்படுத்துவது நல்லது, என்றார்.

"சாக்கடை கழிவு நீரில் உற்பத்தியாகும் கீரை உள்ளிட்ட உணவு பொருட்களை பயன்படுத்துவதால், பல்வேறு நோய்கள் தாக்கும் நிலையுள்ளது. சாக்கடை கழிவு நீராக இருந்தாலும், அந்த நீரை சுத்திகரிப்பு செய்த பின்னரே விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும்' என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

**பருத்தியை விட்டு வைக்காத மாவுப்பூச்சி : உற்பத்தி குறைவால், விவசாயிகள் கவலை**

கோபிசெட்டிபாளையம்: கடத்தூர் பகுதியில் ஏற்பட்ட மாவுப்பூச்சி தாக்குதலால் பருத்தி சாகுபடி குறைந்துள்ளது. சற்று விலை உயர்ந்துள்ள நிலையில் பருத்தி உற்பத்தி குறைந்துள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கோபி, கடத்தூர், நம்பியூர், சிறுவலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் பருத்தி பயிரிடப்படுகிறது. புரட்டாசி பட்டம் எனப்படும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் எம்.சி.யு 5, 9, 12 மற்றும் 13 பருத்தி ரகங்களும், ஃபிப்ரவரி, மார்ச் மாதங்களில் எல்.ஆர்.ஏ.,5166, எஸ்.வி.ஆர்., 12, டி.சி.ஹெச் 213 ஆகிய பருத்தி ரகங்களும் பயிரிடப்படுகிறது.

கோவை மாவட்டம் அன்னூர் பகுதியில் ஏற்பட்ட மாவுப்பூச்சி தாக்குதல், சத்தி மற்றும் கோபி பகுதிகளுக்கும் விரைவாக பரவியது. மாவுப்பூச்சிகளை மருந்துகளால் ஓரளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்த முடிந்தது. பலமான மழை பெய்தால் மாவுப் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும் என

விவசாயிகள் நம்பியிருந்தனர். ஆனால், பருவ மழையும் ஏமாற்றியதால், கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் ஏற்பட்டுள்ளது.

மல்பெரி, பப்பாளி மற்றும் மரவள்ளி கிழங்கை அதிகளவில் பாதித்த மாவு பூச்சிகள், கத்தரி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களை அடுத்து, பருத்தி செடியையும் தாக்கியுள்ளது. கோபியை அடுத்த கடத்தூர், அவ்வையார்பாளையம், அரசூர், குருமந்தூர், அளுக்குளி, சிறுவலூர், உடையாகவுண்டன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நடப்பு சீஸனில் அதிகளவில் பருத்தி பயிரிடப்பட்டது. ஆனால், மாவுப்பூச்சி தாக்குதலால் 50 சதவீதம் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், நடப்பு சீஸனில் பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் நஷ்டத்தில் உள்ளனர்.

பருத்தி விவசாயிகள் கூறியதாவது: வழக்கமாக ஒரு செடியில் 100 முதல் 120 காய்கள் வரை காய்க்கும். மாவுப்பூச்சி தாக்குதல் உள்ளதால், ஒரு பருத்தி செடிக்கு 30 முதல் 40 காய்கள் மட்டுமே கிடைக்கிறது. இதனால், ஒரு ஏக்கருக்கு ஆறு குவிண்டால் மட்டுமே கிடைக்கிறது. நூல் விலை ஏற்றத்தால் பருத்திக்கு நடப்பு சீஸனில் நல்ல விலை கிடைக்கிறது. கடந்தாண்டு ஒரு குவிண்டால் பருத்தி 3,000 ரூபாய்க்கு விற்றது. தற்போது 3,300 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. ஆனால், சாகுபடி குறைவால் பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு நடப்பு சீஸனில் அதிகளவில் வருமான இழப்பு ஏற்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**துல்லிய பண்ணை திட்டத்தில் சங்கம் அமைக்க அழைப்பு**

நாமக்கல்: "எருமப்பட்டி வட்டாரத்தில் 40 ஹெக்டேர் பரப்பில் துல்லிய பண்ணைத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது' என, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: இந்த நிதியாண்டில் எருமப்பட்டி வட்டாரத்தில் 40 ஹெக்டேர் பரப்பில் தோட்டக்கலைத்துறை மூலம் துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேர் என்ற அளவில் ஆர்வமுள்ள 40 விவசாயிகளை தேர்வு செய்து தலா 20 ஹெக்டேர் என்ற அளவில் இரு அலகாக செயல்படுத்தப்பட உள்ளது. வருவாய் கிராமத்தை அடிப்படையாக கொண்டு 20 விவசாயிகள் கொண்ட சங்கம் அமைத்து செயல்பட ஆர்வமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம். திட்டத்தின் கீழ், அரசு நிதி உதவியுடன் சொட்டுநீர்பாசனம் அமைத்துத்தரப்படும். விதைகள் மற்றும் நீரில் கரையும் உரங்கள் மான்ய விலையில் விநியோகம் செய்யப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நொய்யலில் வழிந்தோடும் சாயக்கழிவு நீர் : அஞ்சூர் பஞ்.,ல் விவசாயம் கடும் பாதிப்பு**

க.பரமத்தி: திருப்பூர் சாயக்கழிவு நீர் நொய்யல் ஆற்றில் கலந்து வருவதால் அஞ்சூர் மற்றும் துக்காச்சி பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதியில் பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் சாயக்கழிவு நீர் நொய்யல் ஆற்றில் கலந்து அஞ்சூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட கருவாயன்பாளையம் ஆத்துப்பாலம் கடந்து துக்காட்சி, தொப்பம்பட்டி வழியாக சென்று நொய்யல் கூடுதுறை என்ற இடத்தில் காவிரி ஆற்றில் கலக்கிறது. சாயக்கழிவு நீர் நொய்யல் ஆற்றில் செல்வதால் அஞ்சூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட குப்பகவுண்டன்வலசு, காஞ்சேரிக்கவலசு, குழந்தாபாளையம், பாப்பாவலசு, துக்காட்சி பஞ்சாயத்திற்கு உட்பட்ட ஒண்டியூர், தொப்பம்பட்டி, வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயக்கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணற்று தண்ணீர் பாதிக்கப்பட்டு நச்சுத்தன்மையடைந்துள்ளன. இதனால் தலைமுறையாக விவசாய தொழிலில் ஈடுபட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வழக்கமாக பயிரிடப்பட்ட நெல், கரும்பு, கடலை, எண்ணெய் வித்துகள் பயிரிடப்பட்டது, தற்போது பாதிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் சாயக்கழிவு நீர் நொய்யல் ஆற்றில் கலக்க துவங்கிய கடந்த பத்து ஆண்டுகளாக விவசாய நிலம் படிப்படியாக தரிசு நிலமாக மாறத்துவங்கியது. கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாயி கந்தசாமி கூறியதாவது: க.பரமத்தி யூனியனுக்குட்பட்ட பகுதியில் விவசாயத்துக்கு புகழ் பெற்றிருந்த அஞ்சூர் பஞ்சாயத்து தற்போது சாயக்கழிவு நீரால் வறண்ட பூமியாக மாறியுள்ளது. திருப்பூர் சாயக்கழிவு நீர் நொய்யல் ஆற்றில் விடக்கூடாது என்று விவசாய பாசன சங்கங்கள் பல முறை கோரிக்கை வைத்தும், கோர்ட்டில் வழக்கு போட்டும் இதுவரை சரியான தீர்வு கிடைக்கவில்லை.

அஞ்சூர் மற்றும் துக்காட்சி பஞ்சாயத்து பகுதியில் நொய்யல் ஆற்று பாசனத்தால் ஆண்டு முழுவதும் தானிய விளைச்சலில் பஞ்சம் இல்லாத நிலை தற்போது மாறிவிட்டது. தற்போது விவசாயிகள் தங்களுடைய தேவைக்கும் நெல் விலைக்கு வாங்கும் நிலையேற்பட்டுள்ளது. சாயக்கழிவு பாதிப்புள்ள குடிநீரை பருகி, கரூரில் தற்போது மகப்பேறு மருத்துவமனையை விட மலடு நீக்கும் மருத்துவமனைதான் அதிகரித்துவருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

அஞ்சூர் பஞ்சாயத்து தலைவர் கோபால் கூறுகையில், ""பலமுறை சாயக்கழிவு பிரச்னை குறித்து ஒரத்துப்பாளையம் அணை நிர்வாக பொறியாளரிடம் முறையிட்டும், அரசின் கவனத்துக்கு கொண்டு சென்றும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொடர்ந்து சாயக்கழிவு நீர் கலந்து வருவதால் அஞ்சூர் பகுதி முற்றிலும் வறண்ட பகுதியாக மாறிவிடும் அபாயம் உள்ளது," என்றார்.

**வே.பாளையத்தில் கரும்பு நடவுப்பணி; விவசாயிகள் சுறுசுறுப்பு**

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதிகளில் கரும்பு நடவுப்பணிகள் இம்மாதம் துவங்கியது.

வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதியான, நொய்யல், சேமங்கி, மரவாபாளையம், நடையனூர், கந்தம்பாளையம், கோம்புபாளையம், திருகாடுதுறை, தோட்டக்குறிச்சி, தளவாபாளையம் உட்பட பகுதிகளில் கரும்பு சாகுபடி அதிக அளவில் உள்ளன. சராசரியாக ஐந்தாயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு பயிரிடப்படுகிறது. தற்போது அறுவடை பணி நிறைவு பெற்றதையடுத்து, நடவு பணி துவங்கியுள்ளது.

இதுகுறித்து விவசாயி சுப்ரமணி கூறியதாவது: விவசாய நிலத்தை பொறுத்து மண் பரிசோதனை செய்தும், கரும்பு வளர்ப்பு குறித்த ஆலோசனை வழங்கியும், தனியார் கரும்பு ஆலைகள் சாகுபடி பணிக்கு ஊக்கமளிக்கின்றனர். இப்பகுதியில் ஆலைகளின் ஆலோசனைப்படி கரும்பு சாகுபடி பணி துவங்கப்பட்டுள்ளன. கடனுதவி உள்ளிட்ட விவசாயம் சார்ந்த தகவல்கள் பெறாத விவசாயிகள், சொந்த முயற்சியில் ஆ லை கூடங்களுக்கு வெல்லம் தய ாரிப்பு பணிக்கு கரும்பு அறுவ டை செய்கின்றனர். தற்போது மண்வளத்துக்கு ஏற்ப பரிசோதø ன செய்யப்பட்டு இப்பகுதியில் மஞ்சள், கரும்பு, போந்தா கரும்பு உட்பட ரகம் வாரியாக கரும்பு பதியம் செய்யப்படுகிறது. மிக அதிகமாக மஞ்சள் கரும்பில் சர்க்கரையின் அளவு அதிகம் உள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் இவ்வகை கரும்புகளை பதியம் செய்கின்றனர். வரும் 11 மாதங்களில் இவை அறுவடை செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**தேயிலை தொழிலில் மீண்டும் விலை வீழ்ச்சி :மானியம் மட்டுமே பிரச்னைகளுக்கு தீர்வு**

குன்னூர்:நீலகிரி தேயிலை தொழிலில் மீண்டும் விலை வீழ்ச்சி தென்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் மானிய கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.நீலகிரியில் சமீபகாலமாக நிலவும்

தேயிலை விலை வீழ்ச்சிக்கான காரணம், தீர்வுகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் குன்னூர் தேயிலை ஏல மையத்தில், தமிழக கதர்வாரிய அமைச்சர் ராமச்சந்திரன் தலைமையில் நடத்தப்பட்டது.

மாவட்ட வருவாய் அலவலர் குப்புசாமி, தோட்டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் முன்னிலை வகித்தனர். தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் வரவேற்றார்.கூட்டத்தில், தேயிலை தொழில் சார்ந்த பலர் கூறிய கருத்துக்கள்: சுப்ரமணியம் (நீலகிரி சிறு, குறு விவசாயிகள் சங்க தலைவர்):தேயிலை விலை வீழ்ச்சிக்கு நிரந்தர தீர்வு காணும் முன் தற்காலிக நிவாரணமாக, ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 5 ரூபாய் மானியம் வழங்க வேண்டும். தற்போது ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 3,4 ரூபாய் மட்டுமே வழங்கப்படுகிறது. வேலையாட்களுக்கு கூலி கொடுக்கவே இது போதுமானதாக இல்லை. தேயிலை வாரியத்தால் விவசாய குழந்தைகளின், உயர் படிப்புக்காக வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது;

இதை மீண்டும் வழங்க வேண்டும்.தோட்டங்களில் 15 நாளுக்கு ஒரு முறை இலை பறித்தால் மட்டுமே தரமான பசுந்தேயிலையை பறிக்க முடியும். வேலையாட்கள் பற்றாக்குறையால் இது சாத்தியமாவது இல்லை; எனவே, தேயிலை வாரியம், பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரத்தை வழங்க வேண்டும். தேயிலை தோட்டங்களை கவாத்து செய்ய தேயிலை வாரியம் மானியம் வழங்குகிறது. தேயிலை வாரிய அதிகாரிகளால் கள ஆய்வு செய்யப்பட்டு, மானியம் வழங்க காலதாமதம் ஆவதல், அந்தந்த பகுதியில் உள்ள கிராம நிர்வாக அலுவலரின் ஆய்வறிக்கை பெற்று விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும். சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டு கழகத்தை ஏற்படுத்த வேண்டும்; நீலகிரியில் 50 - 100 மினி தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும்.போஜன் (சிறு விவசாயிகள் நலச்சங்க நிர்வாகி): சிறு விவசாயிகளுக்கு இடைக்கால நிவாரணமாக மானியம் வழங்க வேண்டும்.

பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரத்தை கிராமத்துக்கு ஒன்று வீதம் வழங்க வேண்டும். கூடுதலாக தேயிலை தொழிற்சாலைகள், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும்.பெள்ளி (இ.கம்யூ., மாவட்ட செயலர்): சிறு தேயிலை தொழிற்சாலைகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு ஒவ்வொரு தொழிற்சாலையும் ஒவ்வொரு விலை வழங்குகின்றன. அனைத்து தொழிற்சாலைகளும் சீரான விலை வழங்க வேண்டும். பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க கூடிய காலங்களில், பல தொழிற்சாலைகள் பசுந்தேயிலையை வாங்க மறுக்கின்றன; இதனால், பசுந்தேயிலைகள் கொட்டப்படுகின்றன. மகசூல் அதிகரிக்கும் காலங்களில் சில கூட்டுறவு

தொழிற்சாலைகளை அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வந்து உற்பத்தி மேற்கொள்ள வேண்டும்.கடந்த சில ஆண்டுக்கு முன்  விவசாயிகள் நடத்திய தேயிலை போராட்டத்தின் போது, மத்திய அரசு 2 ரூபாய், மாநில அரசு 2 ரூபாய் என நான்கு ரூபாய், ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு மானியமாக வழங்க ஒப்பந்தம் நிறைவேற்றலாம் என யோசனை தெரிவிக்கப்பட்டது.

அந்த யோசனையை தற்போது அமல்படுத்த வேண்டும்.போஜராஜன் (நீலகிரி சிறு தேயிலை தொழிற்சாலை சங்க நிர்வாகி): தேயிலை ஏலத்தில் கூடுதல் விலைக்கு தேயிலை தூளை விற்க முயற்சி எடுக்க வேண்டும். நீலகிரி தேயிலைக்கு சந்தையை ஏற்படுத்த விளம்பரம் செய்ய வேண்டும்.கார்த்திக் (தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்): தேயிலை தொழிற்சாலைகளில் தற்போது 112-120 குதிரைத் திறன் கொண்ட  மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது; இதை 200 குதிரை திறன் சக்தி கொண்ட இணைப்பாக வழங்கினால், தரமான பசுந்தேயிலை உற்பத்தி செய்ய முடியும்.குண்டன் (முன்னாள் ஊட்டி எம்.எல்.ஏ.,): தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும் போது, தரத்தை பற்றி எவரும் அதிகம் பேசவில்லை. தற்போது மட்டும் தரமான பசுந்தேயிலையை பற்றி தொழிற்சாலைகள் பேசுவது கவலையளிக்கிறது. குன்னூர், கோத்தகிரியில் உள்ள தொழிற்சாலை உரிமையாளர்கள் கூடலூர் விவசாயிகளிடம் இருந்து பசுந்தேயிலை வாங்கி உற்பத்தி செய்கின்றனர். இதனால், உள்ளூர் விவசாயிகளின் பசுந்தேயிலை தேக்கமடைக்கின்றன; இச்செயல் கண்டிக்கத்தக்கது.

**புகையிலை விவசாயிகள் கவனத்திற்கு**

வேடசந்தூர்: வேடசந்தூர் மத்திய புகையிலை ஆராய்ச்சி மைய இயக்குநர் டாக்டர் சாரி கூறியுள்ளதாவது: புகையிலை விவசாயிகள் நடப்பு பருவத்திற்கு புகையிலை நாற்று நட ஆகஸ்டு மாதம் சிறந்தாகும். மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலையத்தில் புகையிலை விதை விற் பனை வரும் ஏழாம் தேதி முதல் துவங்க உள்ளது.

புகையிலை விதை தேவைப்படுவோர் நேரில் அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரையிலும்,மாலை இரண்டு மணி முதல் 4 மணி வரையிலும் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் வேண்டுவோர் தலைவர், மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலையம், வேடசந்தூர் என்ற முகவரிக்கு கடிதம் எழுதி பெற்றுக் கொள்ளலாம். 04551-260243 என்ற டெலிபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். விதை கிலோ 800 ரூபாய் க்கு விற்கப்படுகிறது. இவ் வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மதுரையில் மானிய விலையில் கர்நாடக பொன்னி நெல்விதை**

மதுரை: மதுரை கிழக்கு யூனியனில் கர்நாடக பொன்னி நெல் விதை மானிய விலையில் கிடைக்கும் என விவசாய அதிகாரி தெரிவித்தார்.மதுரை கிழக்கு யூனியன் விவசாய விரிவாக்க மையம் மற்றும் ஒத்தக் கடை, கருப்பாயூரணி துணை விரிவாக்க மையங் களில் குறுவை பருவத்திற்கேற்ற நெல் விதைகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. ஏ.டி.டி., 36, 45, 43, ஏ.எஸ்.டி., 16, மற்றும் ஒரு போக சாகுபடி, கிணற்று பாசனத்திற்கு ஏற்ற ஏ.டி.டி.,39, பி.பி.டி 5204 (கர்நாடக பொன்னி) ஆகிய நெல்ரகங்கள் இருப்பில் உள்ளன. ஒரு கிலோவுக்கு ரூ. 5 மானிய விலையில் கிடைக்கும். கர்நாடக பொன்னி நெல் விதையை வாங்க மதுரை மாவட்ட விவசாயிகள் பலர் வெளிமாவட்டங் களுக்குச் செல்கின்றனர். அவர்கள் மதுரையிலேயே இந்நெல் விதைகளை பெற்றுக்கொள்ளலாம். நெல் சாகுபடிக்கு முக்கியமாக தேவைப்படும் நுண்ணூட்டச் சத்து தரக்கூடிய நுண்ணுயிர் கலவை, சிங்சல்பேட் போன்றவையும் மானியத்தில் கிடைக்கும். விவசாயிகள் வாங்கி பலன்பெறலாம் என உதவி இயக்குனர் எஸ்.கனகராஜ் தெரிவித்தார்.

**விதை மானியம் பெற அழைப்பு**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி.,யில் 46 எக்டேர் பரப்பில் நீர் வள நிலவளதிட்டத்தின் கீழ் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு மானியத்தில் விதைகள் வழங்கப்படவுள்ளன.இத்திட்டத்தில் அர் ஜூன நதி பாயும் உப வடிநில பகுதி பொதுபணித்துறை கண்மாய் பாசன பகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கு ஒரு எக்டேர் பரப்பில் செம்மைநெல் சாகுபடி முறையில் நெல் விவசாயம் செய்ய 9 ஆயிரம் ரூபாய், பயிறு சாகுபடி செய்ய 2,500, மக்கா சோளத்திற்கு 4 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் ஸ்ரீவி., வேளாண் அலுவலகத்தை அணுகலாம் என உதவி இயக்குனர் முத்து முனியாண்டி தெரிவித்தார்.

**செம்மறி ஆடு வளர்ப்பில் வருவாய் போச்சு!**

திருப்பூர் :குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் இருந்து வரும் உல்லன் பெட்ஷீட்களுக்கு, தமிழகத்தில் அதிக வரவேற்பு இருப்பதால், கம்பளிகளுக்கு மவுசு குறைந்து விட்டது. இதனால், செம்மறி ஆடு வளர்ப்பவர்கள், விளைநிலங் களில் பட்டி அமைத்து, வருவாய் பெறுவதில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

நம் நாட்டில் விவசாயத் தொழிலுடன் ஒன்றிணைந்து கால்நடை வளர்ப்பு மேற் கொள்ளப்படுகிறது. சில சமுதாயத்தினர், கால்நடை வளர்ப்பதை மட்டுமே பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். குறிப்பாக, பலவகையிலும் பயனளிக்கும் செம்மறி ஆடு வளர்ப்பதில் அதிக ஆர்வம் செலுத்தப்படுகிறது.இறைச்சிக்காக மட்டுமின்றி செம்மறி ஆட்டில் இருந்து கத்தரிக்கப்படும் முடியை, கிலோ 40 ரூபாய் அளவுக்கும் விற்று வருவாய் ஈட்டி வந்தனர்.

வெள்ளாட்டிற்கு உள்ள அளவுக்கு செம்மறி ஆட்டிற் கும், தற்போது, இறைச்சி கடைகளில் அதிகப்படியான வரவேற்பு உள்ளது.சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, ஊட்டியில் உள்ள கம்பளி ஆடை தயாரிப்பு நிறுவனங்கள், செம்மறி ஆட்டு முடியை கிலோ 40 ரூபாய்க்கு கொள்முதல் செய்தன. இதனால், குறிப்பிட்ட கால இடை வெளியில், செம்மறி ஆட்டு முடியை கத்தரித்து விற்கும் போது, கணிசமான அளவு உபரி வருவாய் கிடைத்தது.

குஜராஜ், ராஜஸ்தான் உள் ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு வந்துள்ள உல்லன் ரக பெட்ஷீட் வரத்து துவங்கியதில் இருந்தே, கம்பளிகளுக்கு மவுசு குறைந்து விட்டது. இதனால், செம்மறி ஆட்டு முடிக்கான விலையும் குறைந்து விட்டது. தற்போது, கிலோ 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை மட்டுமே கொள் முதல் செய்யப்படுகிறது.விலை குறைந்து விட்டதால், செம்மறி ஆட்டு முடிக்கு கிராக்கியில்லை. இதனால், நல்ல மேய்ச்சல் நிலத்தில் வளர்த்து, இறைச்சி கடைகளுக்கு அனுப்பி, காசு பார்க்கின்றனர். மேலும், செம்மறி ஆடு மேய்ப்பவர்கள், சாதாரணமாக 500 ஆடுகளுக்கு அதிகமாக வளர்க்கின்றனர்.இதனால், ஒட்டுமொத்த ஆடுகளுக்கும் தீவனம் வாங்கி கொடுப்பது இயலாத ஒன்று. எனவே, ஒவ்வொரு கிராம மாகச் சென்று மேய்ச்சல் நிலங்களில் ஆடு மேய்க்கின் றனர்.

மதிய நேரத்திலும், இரவு நேரத்தில் ஓரிடத்தில் பட்டி அமைத்து பாது காக்கின்றனர். விளைநிலங்களுக்கு ஆட்டு கழிவுகளால், உரம் கிடைப்ப தால், கிராமப்பகுதியில் உள்ள தோட்டங்களில் பேசி, பட்டி அமைக்கின்றனர். இதற்காக, தோட்டத்து உரிமையாளரி டம் இருந்து கணிசமான தொகையை பெற்றுக் கொள்கின்றனர்.இதுகுறித்து ஆடு மேய்ப் பவர்கள் கூறுகையில், "இறைச்சி மற்றும் பட்டி அமைப்பதில் தொடர் வருமானம் கிடைத்தாலும், செம்மறி முடியில் கிடைத்து வந்த வருவாய் முற்றிலும் தடைபட்டுள்ளது. இதனால், ஒரே இடத்தில் தங்கியிருக்க முடியாது. ஒவ்வொரு ஊராகச் சுற்றிவர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. கம்பளி தயாரிப்பு தொழிற்சாலைகளில் தேவை அதிகரித்தால் மட்டுமே செம்மறி முடியை விற்று காசு பார்க்க முடியும்,' என்றனர்.

**பாலக்காடு மாவட்டத்தில் காய்கறிகள் விலை கடும் உயர்வு தக்காளி கிலோ ரூ.70–க்கு விற்பனை**

*கொழிஞ்சாம்பாறை, ஜூலை.8–*

*பாலக்காடு மாவட்டத்தில் காய்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தக்காளி ஒரு கிலோ 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.*

*காய்கறிகள் விலை உயர்வு*

*கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் சித்தூர், கொல்லங்கோடு, ஆலத்தூர், சொர்னூர், ஒற்றப்பாலம், வடக்கன்சேரி, நெம்மாரை ஆகிய பகுதிகளில் காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.*

*தமிழகத்தில் ஊட்டி, மேட்டுப்பாளையம், பழனி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், உடுமலை, பொள்ளாச்சி பகுதிகளில் இருந்துதான் கேரளாவுக்கு தினமும் லாரிகளில் காய்கறிகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இந்த விலை உயர்வு காரணமாக பொது மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.*

*ஏற்கனவே காய்கறிகளின் விலை உயர்ந்து உள்ள நிலையில் தற்போது டீசல் விலையை அரசு உயர்த்தி உள்ளது. இதனால் லாரி வாடகையும் அதிகரித்துள்ளது. எனவே காய்கறிகளின் விலை வரலாறு காணாத அளவு உயர்ந்துள்ளது.*

*தக்காளி கிலோ 70 ரூபாய்*

*குறிப்பாக பாலக்காடு மாவட்டத்தில் சித்தூர், கொல்லங்கோடு, ஆலத்தூர் உள்ளிட்ட ஊர்களில் தக்காளி பழங்கள் எதிர்பாராத வகையில் விலை உயர்ந்துள்ளது. அதாவது இடத்திற்கு ஏற்றார்போல் ஒரு கிலோ தக்காளி ரூ.50 முதல் ரூ.70 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. அதே போல் பாகற்காய், கத்திரிக்காய், கேரட், பீன்ஸ், உருளை ஆகிய காய்கறிகள் ஒரு கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது.*

*முருங்கைக்காய் கிலோ 40 ரூபாய்க்கும், பச்சை மிளகாய் 60 ரூபாய்க்கும், வெள்ளைப்பூண்டு 140 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. சின்னவெங்காயம், பெரிய வெங்காயம் என்று அனைத்து பொருட்களும் ஒரு கிலோ 20 ரூபாய்க்கு மேல் விற்பனையானது.*

*காய்கறிகளின் விலைகள் இப்படி பொது மக்களை வாட்டியபோது, கேரள அரசு நியாய விலைக்கடைகளில் மண்எண்ணை, மற்றும் அரிசியின் விலையை உயர்த்தி மேலும் அவதிக்குள்ளாக்கி உள்ளது. மேலும் வெளிமார்க்கெட்டிலும் உணவு பொருட்கள் விலை உயர்வால் மக்கள் அவதிப்படுகிறார்கள்.*

*மக்கள் அவதி*

*100 கிராம் மஞ்சள்பொடி 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கோதுமை ரவை ரூ.70–க்கு விற்கப்படுகிறது. வெளி மார்க்கெட்டில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.5 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி காய்கறி, உணவு பொருட்கள், விலை கடுமையாக உயர்ந்து உள்ளதால் டீக்கடைகளில் உணவு பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. அதாவது ஒரு கப் டீ ரூ.5 முதல் ரூ.6 வரை விற்கப்படுகிறது.*

*ஓட்டல்களில் ஒரு சாப்பாடு ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதை மேலும் உயர்த்த வேண்டும் என்று ஓட்டல் உரிமையாளர்கள் கோரிவருகிறார்கள். இப்படி விலை உயர்வால் குடும்ப பாரத்தை தாங்க முடியாத குடும்ப தலைவர்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகிறார்கள்.*

**பாலக்காடு மாவட்டத்தில் நெற்பயிர்களுக்கு பதிலாக இஞ்சி பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

*கொழிஞ்சாம்பாறை, ஜூலை.8–*
*பாலக்காடு மாவட்டத்தில் நெற் பயிர்களுக்கு பதிலாக இஞ்சி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.*

*அரிசி இறக்குமதி*
*கேரள மாநிலத்தில் ஆலப்புழை, குட்டநாடு, பாலக்காடு பகுதியில் மட்டுமே நெல் பயிரிடப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் நெல் மூடைகள் கேரள மக்களுக்கு ஒரு மாதத்திற்கு கூட போதாது. தற்போது கூலி ஆட்கள் கிடைக்காததால் 40 சதவீதம் நெல் விவசாயம் குறைந்து விட்டது. இதனால் கேரளா மக்களுக்கு தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் இருந்துதான் அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.*
*அதோடு, கேரள அரசு உற்பத்தியை அதிகரிக்க விவசாயத்துறைக்கு பல்வேறு திட்டங்கள், நிதி உதவி செய்து வருகிறது. இருந்த போதிலும் நெல் உற்பத்தி அதிகரிக்கவில்லை.*

*இஞ்சி விவசாயம்*
*இந்த நிலையில் கேரளாவின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படும் பாலக்காடு மாவட்டத்தில் தற்போது நெற்பயிர் செய்வது மிகவும் குறைந்து விட்டது. கூலிக்கு ஆட்கள் கிடைக்காததால் ஏராளமானோர் விவசாயம் செய்யாமல் நிலத்தை தரிசு நிலமாக போட்டு இருக்கிறார்கள். இந்த தரிசு நிலங்களை வசதி உள்ளவர்கள் குத்தகைக்கு வாங்கி இஞ்சி விவசாயம் செய்து வருகிறார்கள். இதற்காக ஒரு ஏக்கருக்கு குத்தகை மட்டும் 15 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. நெல் விவசாயம் செய்து கிடைப்பதை விட இது அதிகம். இதனால் பெரும்பாலான விவசாயிகள் நெல் விவசாயத்திற்கு பதில் இஞ்சி விவசாயம் செய்து கொள்ள முடிவு எடுத்து உள்ளனர்.*

*இஞ்சி விலை அதிகரிப்பு*
*அதோடு கடந்த 6 மாத காலமாக ஒரு கிலோ இஞ்சி கிலோ 60 ரூபாய்க்கு மேல் விற்பனை ஆகிறது. இஞ்சிக்கு நல்ல விலை இருப்பதாலும் அதை பயிரிட விவசாயிகள் விரும்புகிறார்கள். நெல் பயிர் செய்தால் நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளுக்கு கூலி ஆட்கள் தேவை அதிகரித்து உள்ளது.*
*ஆனால் இப்போது விவசாயத்திற்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. அதோடு நெல்லுக்கு கொள்முதல் விலையும் குறைவாக கிடைக்கிறது. இதனால் நெல்லுக்கு பதில் இஞ்சி பயிரிட பெரும்பாலான விவசாயிகள் விரும்புகிறார்கள்.*

*இஞ்சியை கொள்முதல் செய்யும் வியாபாரிகள் அதை சுக்காக மாற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ஒரு வருடம் இஞ்சி பயிர் செய்தால் பிறகு 2 ஆண்டுகள் கழித்து தான் அந்த நிலத்தில் மீண்டும் இஞ்சி விவசாயம் செய்ய முடியும்.இதனால் ஒரு ஏக்கர் செலவு போக 50 ரூபாய் வரை லாபம் கிடைப்பதாக விவசாயி ஒருவர் தெரிவித்தார்.*

***நடப்பு நிதி ஆண்டில் பாசுமதி அரிசி ஏற்றுமதி 20 லட்சம் டன்னை தாண்டும்***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் பாசுமதி அரிசி ஏற்றுமதி 20 லட்சம் டன்னை தாண்டும் என எல்.டி. ஃபுட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டில் 17 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது.*

*எல்.டி. ஃபுட்ஸ் மட்டும் ஒரு லட்சம் டன் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டை விட 10 சதவீதம் அதிகமாக இருக்கும் என இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வி.கே.அரோரா தெரிவித்தார்.*

*சென்ற நிதி ஆண்டில், தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், வேளாண் உற்பத்தி சரிவடைந்தது. ஆனால் நடப்பு ஆண்டில் பருவமழை எதிர்பார்ப்புகளுக்கு இணையாக உள்ளது. எனவே சென்ற ஆண்டைக் காட்டிலும் நெல் உற்பத்தி சிறப்பாக இருக்கும் என அவர் மேலும் கூறினார்.*

**தேயிலை வாரியம் அறிவித்துள்ள விலை பகிர்வு திட்டத்தை பின்பற்றாத தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை அமைச்சர் ராமச்சந்திரன் எச்சரிக்கை**

*குன்னூர், ஜூலை.8–*

*தேயிலை வாரியம் அறிவித்துள்ள விலை பகிர்வு திட்டத்தை பின்பற்றாத தேயிலை தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்று தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் கூறினார்.*

*ஆலோசனை கூட்டம்*

*தற்போது தேயிலை விலை வீழ்ச்சி காரணமாக பச்சை தேயிலையின் விலையும் கடுமையாக குறைந்து உள்ளது. கோத்தகிரி பகுதிகளில் வார விலை நிர்ணயம் செய்யாமல் தேயிலை தொழிற்சாலைகள் முன்பணம் வழங்கி உள்ள னர். தேயிலை தொழிற்சாலை கள் சிண்டிகேட் அமைத்து விலையை குறைக்கிறார்கள் என்ற புகார் சிறு தேயிலை விவசாயிகள் மத்தியில்*

எழுந்தது. எனவே பச்சை தேயிலைக்கு விலை உயர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டது.

இதனை தொடர்ந்து பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்வதற்கான ஆலோசனை கூட்டம் குன்னூர் தேயிலை ஏல மைய அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமை தாங்கினார்.

மாவட்ட வருவாய் அதிகாரி குப்புசாமி, தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்கு னர் அம்பலவாணன், தோட் டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் உள்பட முன்னாள் எம்.எல்.ஏ. குண் டன் உள்பட சிறு தேயிலை விவசாயிகள், தேயிலை உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

நல்ல விலை

கூட்டத்தில் தமிழக கதர் வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசிய தாவது:–

இந்த ஆலோசனை கூட்டம் சரியான தருணத்தில் கூட்டப் பட்டு உள்ளது. கடந்த ஒரு மாத காலமாக மகசூல் அதிகரிப்பு காரண மாக பச்சை தேயி லையை தொழிற் சாலைகள் விவசாயி களிடம் இருந்து வாங்கவில்லை. சிறு விவசாயிகளுக்கு நல்ல விலை தொழிற் சாலைக்கு கொடுத்த பச்சை தேயிலைக்கு கிடைக்கவில்லை.

சிறு விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை வழங்க வேண்டும். அப்போது தான் தொழிற்சாலை களில் தரமான தேயிலை தூள் உற் பத்தி செய்ய முடியும். ஆனால் மகசூல் அதி கரிப்பு காலங்களில் அவ்வாறு கொடுக்க முடிவது இல்லை. ஆரம்பத்தில் தரமான தேயிலை பறிக்க சிறிது சிரமமாக இருக்கும். நல்ல விலை கிடைக்கும் உற்சாகமாக தரமான பச்சை தேயிலை பறிக்க இயலும்.

விலை பகிர்வு திட்டம்

மகசூல் அதிகரிப்பு காலங் களில் ஒரு தொழிற்சாலையில் அதன் திறனுக்கு தக்கவாறு தான் பச்சை தேயிலை பெற முடியும். ஒரு விவசாயி ஆண்டு தோறும் எந்த அளவில் பச்சை தேயிலை வழங்கி உள்ளார் என்பதை கணக்கு எடுத்து அதன்படி சராசரியாக பச்சை தேயிலை பெற முயற்சிக்க வேண்டும்.

தேயிலை வாரியத்தின் மூலம் 35:65 என்ற விலை பகிர்வு திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளார்கள். இந்த விலை பகிர்வு திட்டத்தை தொழிற்சாலைகள் இன்றைய சூழ்நிலையில் பயன்படுத்த வேண்டும்.

4 தொழிற்சாலைகள் மட்டுமே 50 ரூபாய்க்கு குறைவாக தேயிலையை விற்பனை செய்துள்ளன. பெரும்பாலான தொழிற் சாலைகள் 50 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்துள்ளன. விலை பகிர்வு திட்டத்தின் படி பார்க்கும் போது பச்சை தேயிலைக்கு ரூ.8 வழங்கி இருக்க வேண்டும்.

நடவடிக்கை

தேயிலை வாரியம் அறிவித் துள்ள 35:65 விலை பகிர்வு திட்டத்தை அனைத்து தொழிற் சாலைகளும் பின்பற்ற வேண்டும். அவ்வாறு பின் பற்றாத தேயிலை தொழிற் சாலைகள் மீது கடும் நடவ டிக்கை எடுக்கப்படும்.

தரமான பச்சை தேயிலை கொண்டு தேயிலை தயாரிக் கும் போது மின்சார செலவும் குறைவடையும். தேயிலை தொழிலுக்கு அரசு மூலம் என்ன உதவி வேண்டுமோ? அது செய்துதரப்படும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசினார்.



# வேளாண்மை செய்திகள்

### விவசாய நிலங்களில்

# மருந்து கத்தரி சாகுபடி



மருந்து பயிரான கத்தரி வகைகளின் சில ரகங்கள் ஸ்டிராய்டு என்ற மருந்து பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் காய்களிலும், விதைகளிலும் சொலாசொடின் ஆல்கலாய்டுகள் உள்ளன. இதன்மூலம் சொலாசொடின் ஆல்கலாய்டுகள் டெஸ்டோஸ்ட்டிரோன் மற்றும் கார்ட்டிகோ ஸ்டிராய்டு மருந்துகள் தயாரிக்க பயன்படுகின்றன.

**மருந்து வகைகள்**

இந்த மருந்து வகைகள் உடலில் ஏற்படும் வலியை உடனடியாக குறைக்கும் மருந்துகள், கர்ப்பத்தடை மருந்துகள் தயாரிக்க அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. அதில் சொலானம், சொலானம் லெசினியேட்டம் வகைகள் முக்கியமானவை.

இந்த ரகங்கள் சாகுபடிசெய்ய குளிர்ச்சியான இடங்கள் மிகவும் ஏற்றது. இவை வறட்சியையும் தாங்கி வளரும் தன்மை கொண்டவை. தற்போது, ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஏப்ரல், மே மாதங்கள் அல்லது ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மாதங்களில் விதைகளை நாற்றங்கால் அமைத்து விதைக்க வேண்டும்.

**விதைக்கும் முறை**

7 மீட்டர் நீளம் 1.20 மீட்டர் அகலம், 10 செ.மீ. உயரமுள்ள மேடைப்பாத்திகளை அமைக்க வேண்டும். ஒரு எக்டேரில் விதைக்க இதுபோல் 10 பாத்திகளை அமைக்க வேண்டும். பாத்திகளை அமைக்கும் முன் 20 கிலோ மக்கிய தொழு எரு இட்டு கலக்கி மண்ணை சமன்படுத்த வேண்டும். 7.5 செ.மீ. இடைவெளியில் நேர்க்கோடுகள் அமைத்து விதைகளை சீராக தூவி விதைத்த பின் மண்ணை மேலாக மூட வேண்டும். பின்பு காய்ந்த இலைச்சருகுகளை பாத்திகளில் பரப்பிவிட வேண்டும்.

தொடர்ந்து நாற்றுகள் நன்றாக வளரும் வரை தினமும் தண்ணீர் தெளிக்க வேண்டும். நாற்றுகளை வேர் வேர் அழுகல் நோய் தாக்காமல் இருப்பதற்கு 0.25 சதவீதம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தை வேர் நனையுமாறு ஊற்ற வேண்டும்.

**நடவு முறை**

நிலத்தை நன்றாக உழுது எக்டேருக்கு 10 டன் தொழு உரமிட்டு மண்ணோடு கலந்து பயன்படுத்த வேண்டும். 45 செ.மீ. இடைவெளியில் பார் அமைத்து நடவு செய்ய வேண்டும். எக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து, 80 கிலோ சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும். நாற்றுகளை நடுமுன் நீர்ப்பாய்ச்சி நடுவது நல்லது. 1 மாதம் கழித்து செடிகளுக்கு 10 தழைச் சத்தை மேலுரமாக இட வேண்டும்.

காய்கள் இளம்பழுப்பு நிறமாக மாறும்போது பறித்துவிட வேண்டும். செடிகளை நடவு செய்த 6 மாதங்களில் காய்களை அறுவடை செய்யலாம். காய்களை இளம் வெயிலில் 1 வாரம் உலர்த்த வேண்டும். இதனால் 5 ஆயிரம் கிலோ பச்சைக்காய்கள் அல்லது 1000 முதல் 1500 கிலோ உலர்ந்த காய்கள் மகசூலாக கிடைக்கும். உலர்ந்த காய்களில் 2.0 சதவீதம் சொலாசொடின் ஆல்கலாய்டு இருக்கும்.

# விவசாய பயிர்களை காக்க உயிரியல் முறையில் பூச்சி கட்டுப்பாடு

இன்றைய வேளாண் உற்பத்தியில் பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த எண்ணற்ற ரசாயன பூச்சி, பூஞ்சாண மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ரசாயன மருந்துகளால் மனிதனுக்கும், கால்நடைக்கும் பல விதமான தீமைகள் ஏற்படுகின்றன. இதே போல் சுற்றுப்புற சூழல்நிலையும் அதிக அளவில் பாதிப்படைகிறது. மேலும் பயிருக்கு நன்மை செய்யும் பூச்சிகளையும் இவை அழித்து விடுகிறது. எனவே உயிரியல் முறை கட்டுப்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. அதன் அடிப்படையில் ஒட்டுண்ணிகள், வைரஸ் கிருமிகள், எதிர் உயிர் பூஞ்சாணங்கள் ஆகியவை நவீன வேளாண்மைக்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

**ஒட்டுண்ணி குளவி**

உலகில் உள்ள பல்வேறு பகுதிகளில் உயிரியல் முறை பூச்சி கட்டுப்பாட்டில் டிரைக்கோகிரம்மா என்ற முட்டை ஒட்டுண்ணி குளவிகள் முக்கிய இடத்தை வகிக்கிறது. பயிர்களை தாக்கி அழித்து கட்டுப்படுத்த இயற்கை நமக்கு அளித்த கொடைதான் டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி குளவியாகும். இவை அளவில் மிகச் சிறிய எறும்புகளை போல் காணப்படும். நெல்லில் காணப்படும் இலைச்சுருட்டு புழு மற்றும் தண்டுப்புழுக்களை அழிக்க ஒட்டுண்ணி குளவிகளை நெல் பயிர் முளைத்த ஒரு வார இடைவெளியில் 30-வது நாளில் இருந்து 5 முறை விட வேண்டும். காய்கறி பயிரில் தோன்றும் காய்த்துளைப்பான் நோயை கட்டுப்படுத்த பூக்கள் பூத்த நாளில் இருந்து 15 நாள் இடைவெளியில் 4 முறை இட வேண்டும். இந்த ஒட்டுண்ணி குளவிகளை காலை, மாலை நேரங்களில் மட்டுமே வயல் வெளிகளில் விட வேண்டும். இவைகளை விடுவதற்கு முன்பும், அதற்கு பிறகும் 7 நாட்களுக்கு ரசாயன பூச்சி மருந்துகளை தெளிக்க கூடாது.

**புரொட்டீனியா புழு**

பருத்தி, நிலக்கடலை, புகையிலை, ஆமணக்கு, சூரிய காந்தி, சோயாபீன்ஸ் போன்ற 100-க்கும் மேற்பட்ட முக்கிய பயிர்களை புரொட்டீனியா புழுக்கள் தாக்கி சேதம் உண்டாக்கி மகசூலை குறைக்கின்றன.

இவற்றை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100 எல்.இ என்.பி என்ற வைரஸ் கரைசலுடன், ஒரு கிலோ நாட்டுச் சர்க்கரையை 100 மில்லி பாலுடன் கலந்து நல்ல தண்ணீரில் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.

இது குளவி வகையைச் சேர்ந்த புழு ஒட்டுண்ணியாகும். தீமை செய்யும் பூச்சிகளை புழு பருவத்திலேயே அழித்து விடுகின்றன. இவை தென்னையை தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தும் கருந்தலைப்புழு களை கட்டுப்படுத்த உதவுகிறது. மேலும் பருத்தியில் ஏற்படும் காய் புழுக்கள், நெல்லில் ஏற்படும் இலைச்சுருட்டுபுழுபோன்ற பல்வேறு பூச்சிகளை கட்டுப்படுத்தவும் உதவி செய்கிறது.

தென்னை மரத்தை தாக்கி சேதத்தை ஏற்படுத்தும் கருந்தலைப் புழுக்களை கட்டுப்படுத்த மரம் ஒன்றுக்கு 20 ஒட்டுண்ணிகள் என்ற வீதத்தில் 15 நாள் இடைவெளியில் 5 முறை மரத்தில் விட வேண்டும். மற்ற பயிர்களான நெல் மற்றும் பருத்திக்கு ஏக்கருக்கு 2 ஆயிரம் ஒட்டுண்ணிகள் வீதம் 15 நாள் இடைவெளியில் 5 முதல் 8 முறை பூச்சியின் தாக்குதலுக்கு ஏற்ப விட வேண்டும். இவ்வாறு இயற்கை சூழல் முறையில் வளரும் பயிர்களில் ஏற்படும் மாசுகளை தவிர்க்க உயிரியல் முறையில் பூச்சி கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**தகவல்:- அகமது கபீர், வேளாண் ஆலோசகர், வேளாண்மை நிலையம், தாராபுரம்.**

# வேளாண்மை கேள்வி - பதில்

கேள்வி: நாட்டுக் கோழி பண்ணை வைத்தால் லாபகரமாக இருக்குமா? ரத்தினசாமி, பல்லடம்.

பதில்: முன்பெல்லாம் கிராமங்களில் வீட்டுக்கு வீடு 4, 5 நாட்டுக் கோழி வளர்ப்பார்கள். வீட்டுக்கு முட்டையும், அவ்வப்போது கோழிகளை விற்பனை செய்வதால் வருமானமும் கிடைக்கும். இறைச்சியும் கிடைக்கும். இந்த கோழிகள் வீட்டை சுற்றி உலாவும் பூச்சி, புழு, வண்டுகள் என்று தீங்கு தரும் உயிரினங்களை தின்று மனிதருக்கு பாதிப்பு ஏற்படாமல் காக்கும். தற்போது கோழி வளர்ப்பு பழக்கம் மறைந்து வருவதால் தான் கிராம பொருளாதாரமும் குறைந்து வருகிறது எனலாம். இப்போது நாட்டுக் கோழி வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு வந்துள்ளது. பண்ணை முறையில் ஒரு கோழிக்கு 0.8 சதுர அடி முதல் 1.2 சதுர அடி வரை இடம் தேவைப்படும். மின்னணு இயந்திரம் மூலம் குஞ்சுகளை பொறிக்க வைத்து சுலபமாக அதிக குஞ்சுகளை பெறலாம். இந்த பண்ணை வளர்ப்பு கோழிகள் 100 நாட்களில் 3.5 கிலோ வரை வளரும். உங்கள் ஊரை சுற்றி தீவன பயிர்கள் பயிரிடப்படுகின்றன. அதனால் உங்களுக்கு தீவனம் சுலபமாக கிடைக்கும். இப்போது நாட்டுஇனத்தின் குணங்கள் மாறாத கலப்பின கோழிகள் பண்ணை வளர்ப்புக்காக உருவாக்கப்பட்டுள்ளன. இது பற்றி அறிய தமிழ்நாடு கால்நடை மருத்துவ விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையத்தை அணுகுங்கள்.

கேள்வி: எனது வண்டல் கலந்த செம்மண் நிலத்தில் பழப்பயிர் சாகுபடி செய்ய முடிவெடுத்துள்ளேன். எந்த மாதிரியான பயிர் லாபகரமானது?

**முருகையா, பொள்ளாச்சி.**

பதில்: தமிழ்நாட்டு விவசாயிகள் கடந்த கோடையில் எலுமிச்சை தட்டுப்பாட்டால் ஆந்திர விவசாயிகளிடம் சென்று முன்பணம் கொடுத்து எலுமிச்சை வாங்கி வருவதாக ஒரு செய்தி வந்தது. தமிழ்நாட்டில் இல்லாத மண்வளமா? எதற்கு கிராக்கி என்று கணக்கிட்டு அதனை பயிரிட்டால் பணம் விளையும் முன்பாகவே கைக்கு வரும். சரி. உங்கள் மண்ணிலும் எலுமிச்சை பயிரிடலாம். நாட்டு ரகம் 4 ஆண்டுகளிலும், ஒட்டுரகம் 2 ஆண்டுகளிலும் காய்பிடிக்கும். முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஊடுபயிராக வெங்காயம், வேர்க்கடலை பயிரிடலாம். ஆண்டுக்கு நிகர லாபமாக 80 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும்.



**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு,**
**தினத்தந்தி, கோவை-18**